அமெரிக்க தூதரகம் கொழும்பு
பத்திரிகைக் குறிப்பு
பொது விவகாரங்கள் பிரிவு
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20180322

**அமெரிக்க தூதரகமும் மாத்தறை வர்த்தக சம்மேளனமும் அமெரிக்க புத்தாக்க மையத்தை ஆரம்பிக்கிறன**

**மார்ச் 22, 2018:** அமெரிக்க தூதுரகம் மாத்தறை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் பங்காண்மையுடன் மார்ச் 21 ஆம் திகதி மாத்தறையில் அமெரிக்க புத்தாக்க மையமொன்றை (American Innovation Hub – iHub) ஆரம்பித்துள்ளது. இந்த மையமானது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களையும் வழங்கவும் ஆங்கில மொழிக் கற்றலை ஊக்குவிக்கவும் அமெரிக்காவில் கற்பதை தூண்டவும் விளக்கப்படுத்தவும் மக்கள் - மக்கள் உறவுகளை பலப்படுத்தவும் செயற்படும்.

"தொழில்நுட்ப மற்றும் பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தென்மாகாணத்தில் ஆக்கத்திறன், புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சிகளை இந்த அமெரிக்க புத்தாக்கம் மையம் தூண்டும்'' என அமெரிக்க தூதரகத்தின் பொது அலுவல்கள் அதிகாரி உத்தியோகத்தர் ஜேம்ஸ் ருஸ்ஸோ ஆரம்ப வைபவத்தில் தெரிவித்தார். "இலங்கையுடனான பங்காண்மையின் 70 ஆவது ஆண்டு நிறைவை நாம் கொண்டாடுகையில் மாத்தறையில், மக்கள் மக்களுடனான தொடர்புகளை விஸ்தரிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.''

இலக்கம் 419, ஹக்மன வீதி, மாத்தறையில் அமைந்துள்ள மாத்தறை வர்த்தக சம்மேளன கட்டிடத்தில் இந்த இலத்திரனியல் மையமானது திரு. றுஸ்ஸோ மற்றும் மாத்தறை மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் மெற்ற விதானகமாராச்சி ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மையமானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை மு.ப. 9.00 – பி.ப. 5.00 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு.ப. 9.00 – நண்பகல் 12.00 மணி வரைக்கும் பொதுமக்களுக்காக திறந்திருக்கும். இந்த இலத்திரனியல் மையம், விடய ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை, கட்டணம் எதுவுமின்றி வழங்குவதுடன், இங்கே அமெரிக்க புத்தகங்கள் மற்றும் அடர்தகடுகளையும் (DVD) பெற்றுக்கொள்ள முடியும்.

மாத்தறையில் அமைந்துள்ள இந்த மையத்திற்கு மேலதிகமாக அமெரிக்க தூதரகமானது கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மலே போன்ற இடங்களிலும் அமெரிக்க மையங்களைக் கொண்டுள்ளது. இந்த மையங்களானவை புத்தகங்கள், DVD க்கள், ஆங்கில மொழி

நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், அமெரிக்க பேச்சாளர்கள் என இன்னும் பலவற்றை வழங்குகின்றன. அதிக தகவல்களைப் பெறுவதற்கு அமெரிக்க தூதரகத்தின் அமெரிக்க மையங்கள் இணையத்தளத்திற்கு தயவுசெய்து செல்க. : https://lk.usembassy.gov/education-culture/american-spaces/